மண்டல அலுவலகம் (தமிழ்நாடு)
தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகம்
143, ஸ்டெர்லிங் ரோடு நுங்கம்பாக்கம் சென்னை – 600034.
மின்னஞ்சல் : rd-tamilnadu@esic.nic.in, தொலைப்பேசி எண்: 044-28306300

# கொரோனாவால் இறந்தவருக்கு உதவும் கரங்களாய் ESIC

தொழிலாளர் காப்பீட்டு கழகம் (ESIC), கொரோனாவால் இறந்த காப்பீட்டாளர்களுக்காக நிவாரணத்திட்டம் (COVID-19 RELIEF SCHEME) ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி காப்பீட்டாளரின் வாரிசு தாரர்களுக்கு, காப்பீட்டாளரின் 90% சராசரி ஊதியம்(குறைந்த பட்சம் 1800/-) மாதாந்திர நிவாரணத்தொகையாக வழங்கப்படும்.

இத்திட்டம் 24.03.2020 - லிருந்து 2 வருட காலம் அமலில் இருக்கும்.

இறந்த காப்பீட்டாளர், நோய்த்தொற்று கண்டறிந்த தேதியிலிருந்து குறைந்தபட்சம் 3 மாதங்களுக்கு முன்னரே ESIC - இல் காப்பீட்டாளராக பதிவு செய்திருக்க வேண்டும்.

நோய்த்தொற்று கண்டறிந்த தேதிக்கு முந்தைய ஒரு வருட காலத்தில், குறைந்தபட்சம் 70 நாட்கள் சந்தா செலுத்தியிருக்க வேண்டும்.

ESI திட்டத்தின் கீழ் பயன்பெறும் மகப்பேறு பயனாளிகள், தற்காலிக ஊனத்திற்கான பயனாளிகள், போன்றோர் விடுப்பில் இருக்கும் போது கொரோனா நோய் தொற்றால் இறக்க நேர்ந்தால் விடுப்பு துவங்கிய தேதிக்கு முந்தைய ஒரு வருட கால கட்டத்தில் மேற்குறிப்பிட்ட தகுதியை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

மேலும் இறந்த காப்பீட்டாளரின் வாழ்க்கைத் துணை மாதம் ரூபாய் 120/- செலுத்தி ESIC மருத்துவமனையில் / ESI மருந்தகத்தில் மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பிக்க அருகில் உள்ள ESIC கிளை அலுவலகத்திற்கு இறந்தவரின் இறப்பு சான்றிதழ், கொரோனா POSITIVE அறிக்கை, வாரிசு தாரர்களின் அடையாளம் மற்றும் பிறந்த தேதிக்கான சான்று போன்றவற்றோடு அணுகவும்.

மேலும் விவரங்களுக்கு அருகிலுள்ள ESIC கிளை அலுவலகத்தை அணுகவும் அல்லது தொலைபேசி எண் 044-28306363- ஐ தொடர்புகொள்ளவும்.

-மண்டல இயக்குனர்(பொறுப்பு)